# வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த பொதுக்கூட்ட அறிக்கை
# செப்டெம்பர் 2022.09.15

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டின் செப்டெம்பர் மாதத்திற்கான மாதாந்த பொதுக்கூட்டம் கௌரவ தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் 2022.09.15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 09.42 மணிக்கு தலைமையலுவலக சபா மண்டபத்தில் ஒரு நிமிட அக வணக்கத்துடன் ஆரம்பமானது. அவ்வேளை சபையின் செயலாளர் திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் அவர்கள் பிரசன்னமாகியிருந்ததுடன் கீழ்க்காணும் அங்கத்தவர்களும் சமூகமாகியிருந்தனர்.

1. கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா
2. கௌரவ உறுப்பினர் சுப்பையா பத்மநாதன்
3. கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் இரத்தினபூபதி
4. கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சர்வேஸ்வரன்
5. கௌரவ உறுப்பினர் பொன்னம்பலம் ஆதவன்
6. கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி
7. கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம்
8. கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை
9. கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன்
10. கௌரவ உறுப்பினர் கந்தையா ஜினதாஸ்
11. கௌரவ உறுப்பினர் சரவணமுத்து தனபாலசிங்கம்
12. கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா
13. கௌரவ உறுப்பினர் சசிகலாதேவி ரவி
14. கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ்
15. கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம்
16. கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன்
17. கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா
18. கௌரவ உறுப்பினர் சுபத்திரா ஜெயசீலன்
19. கௌரவ உறுப்பினர் சண்முகலிங்கம் சஜீவன்
20. கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன்
21. கௌரவ உபதவிசாளர் பொன்னம்பலம் இராசேந்திரம்
22. கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன்
23. கௌரவ உறுப்பினர் சொக்கலிங்கம் சபேசன்
24. கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மயூரன்
25. கௌரவ உறுப்பினர் சுபாஸ்கரன் சந்திரமதி

- கௌரவ உறுப்பினர்களான அனுஷாவதி இதயதாஸ், பொன்னுத்துரை தங்கராசா, மரியதாசன் ஜோசெப் இதயராஜ் ஆகியோர் காலை 09.43 மணிக்கு வருகை தந்தனர்.

❖ கௌரவ தவிசாளர் அவர்கள் தனது தலைமை உரையிலே இன்றைய 53 வது கூட்டத்திற்கு வருகை தந்திருக்கின்ற கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், சபைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள செயலாளர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவரையும் வரவேற்று தனது காலை வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார்.

- கௌரவ உறுப்பினர் சிவபாலசுந்தரம் ஹரிகரன் அவர்கள் காலை 09.44 மணிக்கு வருகை தந்தார்.

❖ கௌரவ தவிசாளர் அவர்களால் தமிழ்மக்களின் விடுதலைக்காக அகிம்சை வழியில் போராடி உயிர்நீத்த இராசையா பார்த்தீபன் (திலீபன்) அவர்களுக்கு ஒரு நிமிட அகவணக்கம் செலுத்துவோம் என தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையினரால் ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது.

❖ தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களால் எமது நாட்டின் குடியேற்றவாதியாக இருந்து செப்டெம்பர் 08 ஆம் திகதி இறப்பெய்திய பிரிட்டிஷ் மகாராணி அவர்களுக்கும் ஒரு நிமிட அகவணக்கம் செலுத்துவோம் என தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையினரால் ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது.

❖ தொடர்ந்து கௌரவ உறுப்பினர் இராமன் சேனாதிராசா அவர்கள் சுகயீனம் காரணமாக கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியாதுள்ளதாகவும் கௌரவ உறுப்பினர் கெங்காசுதன் பிரதீபன் அவர்கள் தனிப்பட்ட தேவை காரணமாக கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியாதுள்ளதாகவும் அறியத் தந்துள்ளார்கள் எனக் கூறி அவர்களது விடுமுறைகளினை அனுமதிப்பதற்கு கௌரவ தவிசாளர் சபைக்குச் சமர்ப்பித்தார்.

- ❖ கௌரவ உறுப்பினர்களான இராமன் சேனாதிராசா, கெங்காசுதன் பிரதீபன் ஆகியோர்களின் விடுமுறைகளினை அனுமதிக்கலாமென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

  - ▪ கௌரவ உறுப்பினர்களான பாக்கியநாதர் மரியதாஸ், மார்க்கண்டு மகாதேவா ஆகியோர் காலை 09.46 மணிக்கு வருகை தந்தனர்.

- தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் தனது தலைமையுரையிலே எமது சபையில் செயலாளராக கடமையாற்றிய திரு.இ.பகீரதன் அவர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு செயலாளராக இடமாற்றம் பெற்று சென்றதனால் திரு.சு.சுதர்ஜன் அவர்கள் எமது சபைக்கு செயலாளராக கடமையேற்றதுடன் சபையின் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தராக கடமையாற்றிய திரு.தி.தியாகச்சந்திரன் அவர்கள் வேலணை பிரதேச சபைக்கு பதில் செயலாளராக நியமனம் பெற்று சென்றுள்ளமையால் திருமதி.த.இரவிச்சந்திரன் அவர்கள் தற்போது பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார். எமது சபையின் நிலையியற் குழுக்களுக்கு பொறுப்புக்கள் அதிகமாக உள்ளது. தற்போது மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. அனைவருக்கும் சமூகப்பொறுப்பு உள்ளது. மக்களை பாதுகாக்க வேண்டிய கடமை மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் எமக்கு உண்டு. பாடசாலைகளின் காலைக் கூட்டத்திற்கு சென்று மாணவர்களுக்கு போதைப்பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மேலும் மாணவர்களின் போசணை மட்டம் குறைவடைந்து காணப்படுவதனால் பாடசாலைகளில் இலைக்கஞ்சி வழங்கும் செயற்பாடு சபையால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் உள்ளூராட்சி மாத, தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளை முன்னிட்டு பல வேலைத்திட்டங்ளை மேற்கொள்ள வேண்டியுள்ளது எனத் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர்களான சேனாதிராசா கலையமுதன், சந்திரகுமார் ரஜனிதேவி ஆகியோர் காலை 09.47 மணிக்கு வருகை தந்தனர்.

  - தொடர்ந்து நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் 18.08.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கையை அங்கீகரிக்குமாறு கௌரவ தவிசாளர் அவர்களினால் கோரப்பட்டது.

- ▪ ஓகஸ்ட் மாதம் 18.08.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- ➢ அடுத்து 31.08.2022, 14.09.2022 ஆகிய திகதிகளில் நடைபெற்ற நிதிக்குழுக் கூட்டத்தின் சிபாரிசிற்கமைய கொடுப்பனவுகள் விபரம் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | திரு.Y.மயூரன் | 1100 அரிகல் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 165,000.00 |
| 02 | R.K.Electricals | LED Driver கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 135,000.00 |
| 03 | All Ceylon Distributors | காகிதாதிகள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 184,940.00 |
| 04 | Nalin Information Technologies, Thirunelvely | 05 கணனிகள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 2,525,000.00 |
| 05 | அளவெட்டி கலைவாணி சனசமூக நிலையம், அளவெட்டி | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் Performance Tranche நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் Improvement of facilities for Citizen Infront Offices with equipment and improved systems in Myliddy and Mallakam Sub Offices வேலைக்கான இரண்டாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 267,240.00 |
| 06 | The Associated Newspapers of Ceylon Limited, No 35, Wijewardana Mawatha, Colombo - 10 | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் Performance Tranche நிதியில் செயற்படுத்தப்படும் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்களை Daily News, Dinamina, Dinakaran ஆகிய பத்திரிகைகளில் பிரசுரித்தமைக்கான கொடுப்பனவு | Rs 137,088.45 |
| 07 | திரு.Y.மயூரன், மகி கட்டடப்பொருள் விற்பனை நிலையம், மாவிட்டபுரம் | 2 டிப்பர் ABC கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 210,000.00 |
| 08 | திரு.Y.மயூரன், மகி கட்டடப்பொருள் விற்பனை நிலையம், மாவிட்டபுரம் | 1 டிப்பர் டஸ்ற் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 100,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 09 | திரு.Y.மயூரன், மகி கட்டடப்பொருள் விற்பனை நிலையம், மாவிட்டபுரம் | 1 டிப்பர் ¾ ' சல்லி கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 110,000.00 |
| 10 | பதிவாளர் நாயகம், பத்தரமுல்ல | 2020 ஆம் ஆண்டிற்கான முத்திரை தீர்வை பட்டியல் தயாரித்தமைக்கான கொடுப்பனவு (காணி பதிவகம், மாவட்ட பதிவகம், யாழ்ப்பாணம்) | Rs 105,500.00 |
| 11 | பதிவாளர் நாயகம், பத்தரமுல்ல | 2021 ஆம் ஆண்டிற்கான முத்திரை தீர்வை பட்டியல் தயாரித்தமைக்கான கொடுப்பனவு (காணி பதிவகம், மாவட்ட பதிவகம், யாழ்ப்பாணம்) | Rs 108,200.00 |

**தீர்மான இல: 01/15.09.2022**

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | திரு.Y.மயூரன் | 1100 அரிகல் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 165,000.00 |
| 02 | R.K.Electricals | LED Driver கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 135,000.00 |
| 03 | All Ceylon Distributors | காகிதாதிகள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 184,940.00 |
| 04 | Nalin Information Technologies, Thirunelvely | 05 கணனிகள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 2,525,000.00 |
| 05 | அளவெட்டி கலைவாணி சனசமூக நிலையம், அளவெட்டி | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் Performance Tranche நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் Improvement of facilities for Citizen Infront Offices with equipment and improved systems in Myliddy and Mallakam Sub Offices வேலைக்கான இரண்டாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 267,240.00 |
| 06 | The Associated Newspapers of Ceylon Limited, No 35, Wijewardana Mawatha, Colombo - 10 | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் Performance Tranche நிதியில் செயற்படுத்தப்படும் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்களை Daily News, Dinamina, Dinakaran ஆகிய பத்திரிகைகளில் பிரசுரித்தமைக்கான கொடுப்பனவு | Rs 137,088.45 |
| 07 | திரு.Y.மயூரன், மகி கட்டடப்பொருள் விற்பனை நிலையம், மாவிட்டபுரம் | 2 டிப்பர் ABC கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 210,000.00 |
| 08 | திரு.Y.மயூரன், மகி கட்டடப்பொருள் விற்பனை நிலையம், மாவிட்டபுரம் | 1 டிப்பர் டஸ்ற் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 100,000.00 |
| 09 | திரு.Y.மயூரன், மகி கட்டடப்பொருள் விற்பனை நிலையம், மாவிட்டபுரம் | 1 டிப்பர் ¾ ' சல்லி கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 110,000.00 |
| 10 | பதிவாளர் நாயகம், பத்தரமுல்ல | 2020 ஆம் ஆண்டிற்கான முத்திரை தீர்வை பட்டியல் தயாரித்தமைக்கான கொடுப்பனவு (காணி பதிவகம், மாவட்ட பதிவகம், யாழ்ப்பாணம்) | Rs 105,500.00 |
| 11 | பதிவாளர் நாயகம், பத்தரமுல்ல | 2021 ஆம் ஆண்டிற்கான முத்திரை தீர்வை பட்டியல் தயாரித்தமைக்கான கொடுப்பனவு (காணி பதிவகம், மாவட்ட பதிவகம், யாழ்ப்பாணம்) | Rs 108,200.00 |

மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு 01.10.2022 ஆம் திகதி தொடக்கம் 31.10.2022 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு எமது சபையின் பொது நூலகங்களுக்கு அங்கத்தவர்களை இலவசமாக இணைப்பதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

  **தீர்மான இல :- 02/15.09.2022**
  எமது சபையின் பொது நூலகங்களுக்கு தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு 01.10.2022 ஆம் திகதி தொடக்கம் 31.10.2022 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு அங்கத்தவர்களை இலவசமாக இணைப்பதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- எமது சபையின் தெல்லிப்பழை பொதுநூலகத்தின் பிரதியாக்கல் இயந்திரத்தின் மூலம் நூலகத்திலுள்ள நூல்களை மட்டும் பிரதியாக்கம் செய்து வழங்குவதற்கும் அதற்கு பின்வருமாறு கட்டண அறவீட்டினை மேற்கொள்வதற்கும் சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

  A4 One Side Photo Copy – Rs 3.00
  A4 Double Side Photo Copy – Rs 5.00

A5 Photo Copy - Rs 3.00
Legal One Side Photo Copy – Rs 7.00
Legal Double Side Photo Copy – Rs 8.00

- ❖ கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் மேற்படி பிரதியாக்கத்திற்கான கட்டணத்தை விட கடதாசிகளின் விலை அதிகமாக காணப்படும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் இது மாணவர்களுக்கு சேவை வழங்கும் நோக்கிலான செயற்பாடு ஆகும் எனத் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 03/15.09.2022**
எமது சபையின் தெல்லிப்பழை பொதுநூலகத்தின் பிரதியாக்கல் இயந்திரத்தின் மூலம் நூலகத்திலுள்ள நூல்களை மட்டும் பிரதியாக்கம் செய்து வழங்குவதற்கும் பின்வருமாறு கட்டண அறவீட்டினை மேற்கொள்வதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

A4 One Side Photo Copy – Rs 3.00
A4 Double Side Photo Copy – Rs 5.00
A5 Photo Copy - Rs 3.00
Legal One Side Photo Copy – Rs 7.00
Legal Double Side Photo Copy – Rs 8.00

- கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சர்வேஸ்வரன் அவர்கள் காலை 10.05 மணிக்கு கௌரவ தவிசாளரின் அனுமதியைப் பெற்று சபையிலிருந்து வெளியேறினார்.

- ➢ காங்கேசன்துறை வீதியிலிருந்து மல்லாகம் இலங்கை வங்கிக்கு அருகாமையாக புகையிரதபாதை நோக்கி வரும் வீதிக்கு ‘சாளம்பை வீதி’ என பெயர் மாற்றம் செய்வதற்கு மல்லாகம் சைவ வாலிபர் சங்க சனசமூக நிலையத்தினரால் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வீதிக்கு ‘சாளம்பை வீதி’ என பெயர் மாற்றம் செய்வதற்கு சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 04/15.09.2022**
காங்கேசன்துறை வீதியிலிருந்து மல்லாகம் இலங்கை வங்கிக்கு அருகாமையாக புகையிரதபாதை நோக்கி வரும் வீதிக்கு ‘சாளம்பை வீதி’ என பெயர் மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ➢ சபையின் இருப்பிலுள்ள கீழ்வரும் விபரத்திற்கமைவான பொருட்கள் கடந்த 2022.09.09 ஆம் திகதியன்று பகிரங்க ஏல விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த ஏல விற்பனையின் போது கேள்விதாரர்களினால் கேள்வி கோரப்படாத பொருட்களின் ஆரம்ப விலையினைக் குறைப்பதற்கும், சபையின் தலைமையலுவலக, உப அலுவலகங்களின் விளம்பரப்பலகைகள் மற்றும் பொது இடங்களில் விளம்பரத்தினைக் காட்சிப்படுத்தி பிறிதொரு நாளில் மிகுதிப் பொருட்களை பகிரங்க ஏலவிற்பனை செய்வதற்கும், ஏற்கனவே சபையில் நியமிக்கப்பட்ட குழு மூலமாக அப்பகிரங்க ஏல விற்பனையினை மேற்கொள்வதற்கும் சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| தொ. இல | பொருள் விபரம் | பொருட்களின் எண்ணிக்கை | தீர்மானிக்கப்பட்ட பொருளின் விலை | 1ஆம் கோரல் | 2ஆம் கோரல் | 3ஆம் கோரல் | 4ஆம் கோரல் | 5ஆம் கோரல் | 6ஆம் கோரல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | TYRE-DUELER H/T (265/70*16) | 4 | 20,000.00 | | | | | | கேள்வி கோரப்படவில்லை |
| 2 | TYRE-GOOD YEAR (600-16) | 2 | 4,000.00 | | | | | | கேள்வி கோரப்படவில்லை |
| 3 | TYRE-MRF (215/ R16) | 1 | 500.00 | | | | | | கேள்வி கோரப்படவில்லை |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | TYRE-CEAT (8.25-20) | 4 | 12,000.00 | | | | | | கேள்வி கோரப்படவில்லை |
| 5 | TYRE-CEAT (185R 14C3PRLT104100R) | 1 | 2,500.00 | | | | | | கேள்வி கோரப்படவில்லை |
| 6 | TVS | 1 | 200.00 | | | | | | கேள்வி கோரப்படவில்லை |
| 7 | TAR BARRLE | 101 (1 NO) | 800.00 | | | | | | கேள்வி கோரப்படவில்லை |
| 8 | OLD IRON | 80Kg | 50.00(1Kg) | 51.00 | 52.00 | | | | |
| 9 | NEWS PAPER | 235kg | 40.00(1kg) | 100.00 | 150.00 | 200.00 | 250.00 | 275.00 | 300.00 |
| 10 | BATTERY ( AMARON 90A) | 2 | 5,000.00 | 6,000.00 | 7,500.00 | 8,000.00 | 10,000.00 | 12,000.00 | 12,500.00 |
| 11 | BATTERY (DAGENITE 35A) | 1 | 1,500.00 | 1,550.00 | 1,600.00 | 1,700.00 | 2,000.00 | 2,500.00 | 2,600.00 |
| 12 | OTHER THINGS (plastic) | 01 bucket Taps | 100.00 | 102.00 | 105.00 | 108.00 | 110.00 | | |

**தீர்மான இல :- 05/15.09.2022**

2022.09.09 ஆம் திகதியன்று பகிரங்க ஏல விற்பனையின் போது கேள்விதாரர்களினால் கேள்வி கோரப்படாத பொருட்களின் ஆரம்ப விலையினைக் குறைப்பதற்கும், சபையின் தலைமையலுவலக, உப அலுவலகங்களின் விளம்பரப்பலகைகள் மற்றும் பொது இடங்களில் விளம்பரத்தினைக் காட்சிப்படுத்தி பிறிதொரு நாளில் மிகுதிப் பொருட்களை பகிரங்க ஏலவிற்பனை செய்வதற்கும், ஏற்கனவே சபையில் நியமிக்கப்பட்ட குழு மூலமாக அப்பகிரங்க ஏல விற்பனையினை மேற்கொள்வதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| தொ. இல | பொருள் விபரம் | பொருட்களின் எண்ணிக்கை | தீர்மானிக்கப்பட்ட பொருளின் விலை | 1ஆம் கோரல் | 2ஆம் கோரல் | 3ஆம் கோரல் | 4ஆம் கோரல் | 5ஆம் கோரல் | 6ஆம் கோரல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | TYRE-DUELER H/T (265/70*16) | 4 | 20,000.00 | | | | | | கேள்வி கோரப்படவில்லை |
| 2 | TYRE-GOOD YEAR (600-16) | 2 | 4,000.00 | | | | | | கேள்வி கோரப்படவில்லை |
| 3 | TYRE-MRF (215/ R16) | 1 | 500.00 | | | | | | கேள்வி கோரப்படவில்லை |
| 4 | TYRE-CEAT (8.25-20) | 4 | 12,000.00 | | | | | | கேள்வி கோரப்படவில்லை |
| 5 | TYRE-CEAT (185R 14C3PRLT104100R) | 1 | 2,500.00 | | | | | | கேள்வி கோரப்படவில்லை |
| 6 | TVS | 1 | 200.00 | | | | | | கேள்வி கோரப்படவில்லை |
| 7 | TAR BARRLE | 101 (1 NO) | 800.00 | | | | | | கேள்வி கோரப்படவில்லை |
| 8 | OLD IRON | 80Kg | 50.00(1Kg) | 51.00 | 52.00 | | | | |
| 9 | NEWS PAPER | 235kg | 40.00(1kg) | 100.00 | 150.00 | 200.00 | 250.00 | 275.00 | 300.00 |
| 10 | BATTERY ( AMARON 90A) | 2 | 5,000.00 | 6,000.00 | 7,500.00 | 8,000.00 | 10,000.00 | 12,000.00 | 12,500.00 |
| 11 | BATTERY (DAGENITE 35A) | 1 | 1,500.00 | 1,550.00 | 1,600.00 | 1,700.00 | 2,000.00 | 2,500.00 | 2,600.00 |
| 12 | OTHER THINGS (plastic) | 01 bucket Taps | 100.00 | 102.00 | 105.00 | 108.00 | 110.00 | | |

- வட்டாரம் - 20, வல்வை சங்கானை வீதியில் அமைந்துள்ள ஆதனத்தின் உரிமை மாற்றத்திற்காக திரு.நாகராஜா சத்தியானந்தன் என்பவர் விண்ணப்பித்திருந்தார். இவ் உரிமை மாற்றத்திற்காக பத்திரிகையில் விளம்பரப்படுத்திய போது எவ்வித ஆட்சேபனையும் சமர்ப்பிக்கப்படாமையால்

விண்ணப்பதாரியின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 06/15.09.2022**
வட்டாரம் - 20, வல்வை சங்கானை வீதியில் அமைந்துள்ள ஆதனத்தினை திரு.நாகராஜா சத்தியானந்தன் என்பவர் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ எமது சபையின் செயலாளராக கடமையாற்றிய திரு.இ.பகீரதன் அவர்கள் 04.09.2022 ஆம் திகதியிலிருந்து இடமாற்றம் பெற்று சென்றுள்ளமையால் 05.09.2022 ஆம் திகதி முதல் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு.சு.சுதர்ஜன் அவர்களினை எமது சபையின் நடைமுறை கணக்குகள் 7573141, 7573232 மற்றும் பிரதேச சபை- உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்ட (LDSP PROJECT) கணக்கு 88999464 என்பவற்றிற்கு காசோலையில் முதலாவது கையொப்பதாரராக கையொப்பம் இடுவதற்கு சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 07/15.09.2022**
05.09.2022 ஆம் திகதி முதல் திரு.சு.சுதர்ஜன் (செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை) அவர்களினை எமது சபையின் நடைமுறை கணக்குகள் 7573141, 7573232 மற்றும் பிரதேச சபை- உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்ட (LDSP PROJECT) கணக்கு 88999464 என்பவற்றிற்கு காசோலையில் முதலாவது கையொப்பதாரராக கையொப்பம் இடுவதற்கு தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் இரத்தினபூபதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் காலை 10.21 மணிக்கு வருகை தந்தார்.

➢ எமது சபையில் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றிய திரு.தி.தியாகச்சந்திரன் அவர்கள் 11.09.2022 ஆம் திகதியிலிருந்து இடமாற்றம் பெற்று சென்றுள்ளமையால் 12.09.2022 ஆம் திகதி தொடக்கம் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி.த.இரவிச்சந்திரன் அவர்களினை எமது சபையின் நடைமுறை கணக்குகள் 7573141, 7573232 மற்றும் பிரதேச சபை- உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்ட (LDSP PROJECT) கணக்கு 88999464 என்பவற்றிற்கு காசோலையில் இரண்டாவது கையொப்பதாரராக கையொப்பம் இடுவதற்கு சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 08/15.09.2022**
12.09.2022 ஆம் திகதி தொடக்கம் திருமதி.த.இரவிச்சந்திரன் (பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்) அவர்களினை எமது சபையின் நடைமுறை கணக்குகள் 7573141, 7573232 மற்றும் பிரதேச சபை- உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்ட (LDSP PROJECT) கணக்கு 88999464 என்பவற்றிற்கு காசோலையில் இரண்டாவது கையொப்பதாரராக கையொப்பம் இடுவதற்கு தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ 2022 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது வாக்குப்பணமாற்றம் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**இரண்டாவது வாக்குப்பணமாற்ற வரவு செலவுத்திட்டம் - 2022.09.15**

| சேமிப்பு | | | | செலவினம் | | |
|---|---|---|---|---|---|---|
| இல. | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை |
| 1 | 1-105-8 | ஏனையவை (கணக்காய்வுக்கட்டணம், இணையவசதிகள், விலைமதிப்பீட்டுத் திணைக்களக்கட்டணம், காப்புறுதி, புகைப்பரிசோதனைவரி, வழக்குச் செலவு முதலியன) | 15,000.00 | 1-105-4 | வாடகைகளும் கேள்விக்கட்டணமும் | 15,000.00 |
| 2 | 2-205-7 | சௌக்கியசேவைகள் (Covid 19 நோய் தடுப்பு) | 100,000.00 | 1-103-1 | எழுதுகருவிவகைகளும் அலுவலக தேவைப் பொருட்களும் | 275,000.00 |
| 3 | 3-305-2 | கேள்விக்கட்டணமும் விளம்பரமும் | 100,000.00 | | | |
| 4 | 1-102-1 | பயணச் செலவுகள் (உள்ளூர்) | 75,000.00 | | | |
| 5 | 3-301-2 | மேலதிக நேர, விடுமுறை நாட் கொடுப்பனவுகள் | 250,000.00 | 1-105-7 | அச்சிடும் சேவைகள் | 250,000.00 |
| | மொத்தம் | | **540,000.00** | | | **540,000.00** |

**தீர்மான இல :- 09/15.09.2022**
2022 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது வாக்குப்பணமாற்றத்திற்காக அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தையா ஜினதாஸ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| இரண்டாவது வாக்குப்பணமாற்ற வரவு செலவுத்திட்டம் - 2022.09.15 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சேமிப்பு | | | | செலவினம் | | | |
| இல. | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை | |
| 1 | 1-105-8 | ஏனையவை (கணக்காய்வுக்கட்டணம், இணையவசதிகள், விலைமதிப்பீட்டுத் திணைக்களக்கட்டணம், காப்புறுதி, புகைப்பரிசோதனைவரி, வழக்குச் செலவு முதலியன) | 15,000.00 | 1-105-4 | வாடகைகளும் கேள்விக்கட்டணமும் | 15,000.00 | |
| 2 | 2-205-7 | சௌக்கியசேவைகள் (Covid 19 நோய் தடுப்பு) | 100,000.00 | 1-103-1 | எழுதுகருவிவகைகளும் அலுவலக தேவைப் பொருட்களும் | 275,000.00 | |
| 3 | 3-305-2 | கேள்விக்கட்டணமும் விளம்பரமும் | 100,000.00 | | | | |
| 4 | 1-102-1 | பயணச் செலவுகள் (உள்ளூர்) | 75,000.00 | | | | |
| 5 | 3-301-2 | மேலதிக நேர, விடுமுறை நாட் கொடுப்பனவுகள் | 250,000.00 | 1-105-7 | அச்சிடும் சேவைகள் | 250,000.00 | |
| | மொத்தம் | | **540,000.00** | | | **540,000.00** | |

- தீர்மான இல:- 06/31.12.2021 இன் பிரகாரம் LDSP திட்டத்தின் கீழ் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பெறுகைக்குழு உறுப்பினர்களாக கடமையாற்றிய சபையின் செயலாளர் - திரு.இ.பகீரதன், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் – திரு.தி.தியாகச்சந்திரன் ஆகியோர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளமையால் தற்போது செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு.சு.சுதர்ஜன், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி.த.இரவிச்சந்திரன் ஆகியோரை மேற்படி குழுவின் உறுப்பினர்களாக நியமிப்பதற்கு சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 10/15.09.2022**

LDSP திட்டத்தின் கீழ் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பெறுகைக்குழு உறுப்பினர்களாக கடமையாற்றிய சபையின் செயலாளர் - திரு.இ.பகீரதன், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் – திரு.தி.தியாகச்சந்திரன் ஆகியோரிற்கு பதிலாக திரு.சு.சுதர்ஜன் (செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை), திருமதி.த.இரவிச்சந்திரன் (பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்) ஆகியோரை மேற்படி குழுவின் உறுப்பினர்களாக நியமிப்பதற்கு தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- தீர்மான இல:- 05/31.12.2021 இன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான சபையின் கொள்ளல் சபை, கேள்விச்சபை உறுப்பினர்களாக கடமையாற்றிய சபையின் செயலாளர் - திரு.இ.பகீரதன், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் – திரு.தி.தியாகச்சந்திரன் ஆகியோர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளமையால் தற்போது செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு.சு.சுதர்ஜன், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி.த.இரவிச்சந்திரன் ஆகியோரை மேற்படி குழுக்களின் உறுப்பினர்களாக நியமிப்பதற்கும் கொள்ளல் சபை உறுப்பினரான திருமதி.த.இரவிச்சந்திரன் அவர்களுக்கு பதிலாக திரு.கு.பாலசந்தர் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) அவர்களை கொள்ளல் சபை உறுப்பினராக நியமிப்பதற்கும் சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 11/15.09.2022**

இவ் ஆண்டிற்கான சபையின் கொள்ளல் சபை, கேள்விச்சபை உறுப்பினர்களாக கடமையாற்றிய சபையின் செயலாளர் - திரு.இ.பகீரதன், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் – திரு.தி.தியாகச்சந்திரன் ஆகியோரிற்கு பதிலாக திரு.சு.சுதர்ஜன் (செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை), திருமதி.த.இரவிச்சந்திரன் (பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்) ஆகியோரை மேற்படி குழுக்களின் உறுப்பினர்களாக நியமிப்பதற்கும் கொள்ளல் சபை உறுப்பினரான திருமதி.த.இரவிச்சந்திரன் அவர்களுக்கு பதிலாக திரு.கு.பாலசந்தர் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) அவர்களை கொள்ளல் சபை உறுப்பினராக நியமிப்பதற்கும் தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- சபை நிதி மூலம் மேற்கொள்ளப்படும் கீழ் வரும் வேலைகளுக்கான மதிப்பீடு (ரூபா 17,459,269.68) தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட வேலைகளினை சபை நிதி - 2022 மூலம் மேற்கொள்வதற்கும், குறிப்பிட்ட வேலைகளினை பகிரங்க கேள்வி கோரல் மூலம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கும் சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | வேலைத் திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | கிராம அலுவலர் பிரிவு இலக்கம் | வட்டார இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | Reconstruction of Koovil Karukampanai 1 st Left Site Lane | 1,998,000.00 | J/222 | Ward -01 |
| 02 | Reconstruction of Kollankaladdy Pillaiyar Kovil East Lane | 1.150,000.00 | J/231 | Ward-09 |

| | | | | |
|---|---|---|---|---|
| 03 | Reconstruction of Maviddapuram Keerimalai Thampasiddy Cross Lane | 1,054,000.00 | J/225 | Ward -10 |
| 04 | Reconstruction of Uyanai 3 rd Lane Left By Lane Stage I | 1,945,000.00 | J/221 | Ward-02 |
| 05 | Reconstruction of Sampuvil Vairavar Kovil Road | 1,704,049.98 | J/250 | Ward -04 |
| 06 | Renovation of Ponnippulam Road – 3rd By Lane | 1,326,000.00 | J/215 | Ward -12 |
| 07 | Renovation of Alukkai Road 5th Right Site Lane | 1,119,000.00 | J/217 | Ward-18 |
| 08 | Reconstruction of Police Station 1st 2nd Left By Lane | 1,620.000.00 | J/229 | Ward -13 |
| 09 | Reconstruction of Ponnaya Road 1st Left lane | 1,130,000.00 | J/224 | Ward -11 |
| 10 | Reconstruction of Kilanai Cross Road at Tellippalai | 1,222,000.00 | J/228 | Ward -17 |
| 11 | Reconstruction of 8th Mile Post 2nd Right Lane 1st , 5th left Lane (Disable) | 1,415,000.00 | J/229 | Ward -13 |
| 12 | Reconstruction of Avalai Road - Palaly East | 1,013,214.10 | J/253 | Ward -06 |
| 13 | Construction of Palaly North Housing Scheme Road | 2,335,747.20 | J/254 | Ward-07 |
| 14 | Reconstruction of Manaviral Road (Valvaipulam) | 1,197,258.40 | J/253 | Ward - 08 |

**தீர்மான இல :- 12/15.09.2022**

சபை நிதி மூலம் மேற்கொள்ளப்படும் கீழ் வரும் வேலைகளுக்கான மதிப்பீட்டின் பிரகாரம் குறிப்பிட்ட வேலைகளினை பகிரங்க கேள்வி கோரல் மூலம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| இல | வேலைத் திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | கிராம அலுவலர் பிரிவு இலக்கம் | வட்டார இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | Reconstruction of Koovil Karukampanai 1 st Left Site Lane | 1,998,000.00 | J/222 | Ward -01 |
| 02 | Reconstruction of Kollankaladdy Pillaiyar Kovil East Lane | 1.150,000.00 | J/231 | Ward-09 |
| 03 | Reconstruction of Maviddapuram Keerimalai Thampasiddy Cross Lane | 1,054,000.00 | J/225 | Ward -10 |
| 04 | Reconstruction of Uyanai 3 rd Lane Left By Lane Stage I | 1,945,000.00 | J/221 | Ward-02 |
| 05 | Reconstruction of Sampuvil Vairavar Kovil Road | 1,704,049.98 | J/250 | Ward -04 |
| 06 | Renovation of Ponnippulam Road – 3rd By Lane | 1,326,000.00 | J/215 | Ward -12 |
| 07 | Renovation of Alukkai Road 5th Right Site Lane | 1,119,000.00 | J/217 | Ward-18 |
| 08 | Reconstruction of Police Station 1st 2nd Left By Lane | 1,620.000.00 | J/229 | Ward -13 |
| 09 | Reconstruction of Ponnaya Road 1st Left lane | 1,130,000.00 | J/224 | Ward -11 |
| 10 | Reconstruction of Kilanai Cross Road at Tellippalai | 1,222,000.00 | J/228 | Ward -17 |
| 11 | Reconstruction of 8th Mile Post 2nd Right Lane 1st , 5th left Lane (Disable) | 1,415,000.00 | J/229 | Ward -13 |
| 12 | Reconstruction of Avalai Road - Palaly East | 1,013,214.10 | J/253 | Ward -06 |
| 13 | Construction of Palaly North Housing Scheme Road | 2,335,747.20 | J/254 | Ward-07 |
| 14 | Reconstruction of Manaviral Road (Valvaipulam) | 1,197,258.40 | J/253 | Ward - 08 |

- சபை மூலம் மேற்கொள்ளப்படும் கீழ் வரும் வேலைகளுக்கான மதிப்பீடு (ரூபா 5,767,103.60) தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட வேலைகளினை சபை நிதி (அபிவிருத்தி ஒதுக்கம்) மூலம் மேற்கொள்வதற்கும், குறிப்பிட்ட வேலைகளினை பகிரங்க கேள்வி கோரல் மூலம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கும் சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | வேலைத் திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | கிராம அலுவலர் பிரிவு இலக்கம் | வட்டார இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | Reconstruction of 8 th Mile Post Lane 2 nd Right Lane 1 st Left Lane | 950,000.00 | J/229 | Ward -12 |
| 02 | Reconstruction of Vikneswara Road 2nd Right Lane 1st Left Lane | 875,969.60 | J/250 | Ward -04 |
| 03 | Renovation of Mahathma Road – 10 th Right Site Lane | 551,000.00 | J/216 | Ward -12 |
| 04 | Renovation of Soda Company Road & Soda Company Road 3rd Right Site Lane | 1,126,000.00 | J/214 | Ward -20 |
| 05 | Construction of Thaneerthalvu Vairavarkovil Veethy (Balance Work) - Kurumpasiddy | 2,264,134.00 | J/238 | Ward -16 |

**தீர்மான இல :- 13/15.09.2022**

சபை நிதி (அபிவிருத்தி ஒதுக்கம்) மூலம் மேற்கொள்ளப்படும் கீழ் வரும் வேலைகளுக்கான மதிப்பீட்டின் பிரகாரம் குறிப்பிட்ட வேலைகளினை பகிரங்க கேள்வி கோரல் மூலம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| இல | வேலைத் திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | கிராம அலுவலர் பிரிவு இலக்கம் | வட்டார இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | Reconstruction of 8 th Mile Post Lane 2 nd Right Lane 1 st Left Lane | 950,000.00 | J/229 | Ward -12 |
| 02 | Reconstruction of Vikneswara Road 2nd Right Lane 1st Left Lane | 875,969.60 | J/250 | Ward -04 |
| 03 | Renovation of Mahathma Road – 10 th Right Site Lane | 551,000.00 | J/216 | Ward -12 |
| 04 | Renovation of Soda Company Road & Soda Company Road 3rd Right Site Lane | 1,126,000.00 | J/214 | Ward -20 |
| 05 | Construction of Thaneerthalvu Vairavarkovil Veethy (Balance Work) - Kurumpasiddy | 2,264,134.00 | J/238 | Ward -16 |

- பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் (LDSP) மேற்கொள்ளப்பட்ட காங்கேசன்துறை பொதுச்சந்தைக்கு நீர்வசதி ஏற்படுத்தி கொடுப்பதற்கு ஏதுவாக தண்ணீர்த்தாங்கி அமைத்தல் வேலைத்திட்டத்திற்கு (Construction for Water Tank at Kankesanthurai Market) ரூபா 1,188,000.00 இற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த வேலைத்திட்டத்தினை சபை நிதி - 2022 மூலம் மேற்கொள்வதற்கும், குறிப்பிட்ட வேலைகளினை பகிரங்க கேள்வி கோரல் மூலம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கும் சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 14/15.09.2022**

காங்கேசன்துறை பொதுச்சந்தையில் தண்ணீர்த்தாங்கி அமைத்தல் வேலைத்திட்டத்திற்கு (Construction for Water Tank at Kankesanthurai Market) ரூபா 1,188,000.00 இற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த வேலைத்திட்டத்தினை சபை நிதி - 2022 மூலம் மேற்கொள்வதற்கும், குறிப்பிட்ட வேலைகளினை பகிரங்க கேள்வி கோரல் மூலம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- பிரதேச சபைகள் சட்டம் பாகம் VI உப பிரிவு 170 இன் பிரகாரம் கீழ்க்குறிப்பிடப்பட்ட விபரப்படி 2022 ஆம் ஆண்டுக்கான முதலாவது உபமானிய வரவு செலவுத் திட்டம் சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| முதலாவது உபமானிய வரவு செலவுத்திட்டம் - 2022 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | | | செலவினம் | | |
| இல. | வருமானத் தலைப்பு | விபரம் | தொகை | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை |
| 1 | 2.4.43 | அறவிடற்பாலதான கட்டணம் (கழிவகற்றல்) | 400,000.00 | 6-607-9(II) | நூலக விழா | 400,000.00 |
| 2 | 3.2.22 | மேலதிக வருமானம், கடை வாடகை | 1,650,000.00 | 2-209-4 | கருவிகள், சாதனங்கள், ஆயுதங்கள் | 500,000.00 |
| | | | | 1-109-2 | தளபாடமும் பொருத்தும் | 500,000.00 |
| | | | | 2.207.3 | வாழ்விடங்களை மேம்படுத்தல் (மலசலகூடம் அமைத்தல், மாற்றுத்திறனாளிகளுக்கான மலசலகூடம் அமைத்தல்) | 650,000.00 |
| | மொத்தம் | | **2,050,000.00** | | | **2,050,000.00** |

**தீர்மான இல :- 15/15.09.2022**

பிரதேச சபைகள் சட்டம் பாகம் VI உப பிரிவு 170 இன் பிரகாரம் கீழ்க்குறிப்பிடப்பட்ட விபரப்படி 2022 ஆம் ஆண்டுக்கான முதலாவது உபமானிய வரவு செலவுத் திட்டத்திற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| முதலாவது உபமானிய வரவு செலவுத்திட்டம் - 2022 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | | | செலவினம் | | |
| இல. | வருமானத் தலைப்பு | விபரம் | தொகை | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை |
| 1 | 2.4.43 | அறவிடற்பாலதான கட்டணம் (கழிவகற்றல்) | 400,000.00 | 6-607-9(II) | நூலக விழா | 400,000.00 |
| 2 | 3.2.22 | மேலதிக வருமானம், கடை வாடகை | 1,650,000.00 | 2-209-4 | கருவிகள், சாதனங்கள், ஆயுதங்கள் | 500,000.00 |
| | | | | 1-109-2 | தளபாடமும் பொருத்தும் | 500,000.00 |
| | | | | 2.207.3 | வாழ்விடங்களை மேம்படுத்தல் (மலசலகூடம் அமைத்தல், மாற்றுத்திறனாளிகளுக்கான மலசலகூடம் அமைத்தல்) | 650,000.00 |
| | மொத்தம் | | **2,050,000.00** | | | **2,050,000.00** |

- வருடாந்த வரவு செலவுத்திட்டத்தில் நூலக செயற்பாட்டிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டினைக் கொண்டு தற்போதைய நிலையில் குறித்த நிகழ்வுகளை நிறைவேற்ற முடியாதுள்ளமையால் எமது பிரதேசத்தின் பாடசாலை மாணவர்களின் அறிவு வளர்ச்சியினை

மேம்படுத்தும் நோக்கில் நூலக செயற்பாடுகளை சிறப்பான முறையில் முன்னெடுத்து செல்வதற்காக இவ்வருடம் 2-4-43 வருமானத் தலைப்பின் கீழ் கிடைக்கப்பெற்ற வருமானத்திலிருந்து ஒவ்வொரு நூலகத்திற்கும் ரூபா 100,000.00 வீதம் செலவினை கௌரவ ஆளுநரின் அனுமதியினைப் பெற்று மேற்கொள்வதற்காக சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 16/15.09.2022**
தேசிய வாசிப்பு மாத நிகழ்வை ஒட்டிய நிகழ்வுகளுக்காக 2022 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் 6-607-9(II) தலைப்பில் ஒதுக்கப்பட்ட ரூபா 520,000.00 நிதியிலிருந்து ரூபா 400,000.00 இனை கௌரவ ஆளுநரின் அனுமதியினைப் பெற்று செலவு செய்வதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- தீர்மான இல:- 17/18.08.2022 இன் பிரகாரம் CDLG திட்டத்தினூடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 600,000.00 இனை பயன்படுத்தி வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் விபரம் சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**வீட்டுத்தோட்ட உதவிகோரும் பயனாளிகள் விபரம்**

| தொ. இல | முழுப் பெயர் | வட்டாரம் | கிராம அலுவலர் பிரிவு | முகவரி | குடும்ப அங்கத்தவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | பகீரதன் வனிதா | 1 | J/222 | கூவில் கீரிமலை | 5 |
| 2 | மயில்வாகனம் பாலேஸ்வரி | 1 | J/222 | கூவில் கீரிமலை | 5 |
| 3 | கமலக்கண்ணன் றொஜிதா | 1 | J/222 | கூவில் கீரிமலை | 4 |
| 4 | மரியவேஜினி இக்னேரியஸ் | 2 | J/221 | சென்ஜேம்ஸ், இளவாலை வடக்கு | 2 |
| 5 | சுரேஸ்குமார் டோமினிக்கா | 2 | J/221 | சென்ஜேம்ஸ், இளவாலை வடக்கு | 1 |
| 6 | நிதர்சன் சோபிகா | 2 | J/221 | நாதோலை, இளவாலை வடக்கு | 4 |
| 7 | அரியகுட்டி அமுதராசா | 3 | J/233 | மாம்பிராய் வீதி, காங்கேசன்துறை | 4 |
| 8 | பத்மராசா கஜன் | 3 | J/233 | மாம்பிராய் வீதி, காங்கேசன்துறை | 4 |
| 9 | யோகராசா ரதீஸ்வரன் | 3 | J/233 | மாம்பிராய் வீதி, காங்கேசன்துறை | 4 |
| 10 | குணரத்தினம் இரத்தினேஸ்வரன் | 4 | J/250 | கேசரிவீதி, தையிட்டி | 4 |
| 11 | பொன்னுச்சாமி கேதீஸ்வரன் | 4 | J/249 | சேகரம்வீதி, தையிட்டி | 6 |
| 12 | சுப்பிரமணியம் பத்மநாதன் | 4 | J/250 | கலைவாணி வீதி, தையிட்டி | 3 |
| 13 | ரவீந்திரன் அன்பரசி | 5 | J/251 | வீரமாணிக்கம் தேவன்துரை மயிலிட்டித்துறை வடக்கு | 3 |
| 14 | ராஜ் ராஜீவ்காந்தி | 5 | J/251 | மயிலிட்டித்துறை வடக்கு | |
| 15 | கணேசமூர்த்தி தேவகி | 5 | J/246 | நாவலடி வீதி, மயலிட்டி வடக்கு | 4 |
| 16 | சூசைதாஸ் தேவமலர் | 7 | J/254 | அன்ரனிபுரம், பலாலி வடக்கு | 2 |
| 17 | எட்மன் ஜெயராசா மரியகிறேற்ரா | 7 | J/254 | அன்ரனிபுரம், பலாலி வடக்கு | 4 |
| 18 | பிறேமதாஸ் பற்றிமாவதி | 7 | J/246 | அன்ரனிபுரம், பலாலி வடக்கு | 1 |
| 19 | பிரசாத் மயூரி ஜென் சலஸ்ரினா | 8 | J/252 | பலாலி தெற்கு, வசாவிளான் | 4 |
| 20 | திருச்செல்வம் அருள்ஜெயபால் | 8 | J/252 | பலாலி தெற்கு, வசாவிளான் | 5 |
| 21 | பொன்ராசா புனிதஅமலராணி | 8 | J/252 | பலாலி தெற்கு, வசாவிளான் | 2 |
| 22 | முருகையா நகுலேஸ்வரி | 9 | J/231 | சாயுடை, மாவிட்டபுரம் | 4 (மனநோயாளி) |
| 23 | விக்கினேஸ் துஸ்யந்தினி | 9 | J/237 | பளை வீமன்காமம் தெற்கு, தெல்லிப்பளை | 4 |
| 24 | நல்லதம்பி தெய்வானைப்பிள்ளை | 9 | J/231 | அரசடி வீதி, மாவிட்டபுரம் | 2 |
| 25 | பஞ்சலிங்கம் மகேஸ்வரி | 10 | J/225 | மாவைகலட்டி, கொல்லங்கலட்டி | 1 |
| 26 | நித்தியானந்தம் சுபாசினி | 10 | J/225 | மாவைகலட்டி, கொல்லங்கலட்டி | 4 |
| 27 | தவபாலன் மகாராணி | 10 | J/225 | மாவைகலட்டி, கொல்லங்கலட்டி | 2 |
| 28 | ஜெயசீலன் பத்மினி | 11 | J/223 | நவக்கிரி, வித்தகபுரம் | 5 |
| 29 | அருமைநாயகம் ராஜேஸ்வரி | 11 | J/223 | நவக்கிரி, வித்தகபுரம் | 6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30 | ஜெகதீஸ்வரன் ஜெகதீஸ்வரி | 11 | J/223 | நவக்கிரி, வித்தகபுரம் | 4 |
| 31 | நவரத்தினம் பிரசாத் | 12 | J/215 | பொன்னிப்புலம் | 2 |
| 32 | வீரவாகு ஆனந்தராசா | 12 | J/216 | அளவெட்டி மத்தி | 5 |
| 33 | சுதேஸ்வரன் மாலினி | 12 | J/215 | அளவெட்டி வடக்கு | 3 |
| 34 | விநாயகதாசன் இரஞ்சினிதேவி | 13 | J/230 | சந்தை வீதி, தெல்லிப்பளை | 2 |
| 35 | சுதாகரன் தவராணி | 13 | J/230 | சந்தை வீதி, தெல்லிப்பளை | 2 |
| 36 | உதயகுமார் உதயசாந்தினி | 13 | J/229 | சாத்தனாவத்தை, துர்க்காபுரம் | 2 |
| 37 | கணேசானந்தம் சந்திராதேவி | 14 | J/241 | டச்சு வீதி 3ம் ஒழுங்கை, வறுத்தலைவிளான் | 4 |
| 38 | சௌந்தர்ராஜன் வசந்தி | 14 | J/241 | வல்லை அராலி வீதி, வறுத்தலைவிளான் | 2 |
| 39 | வின்சன் சுமித்திரா | 14 | J/241 | டச்சு வீதி, வறுத்தலைவிளான் | 2 |
| 40 | பொன்னு இராசதுரை | 15 | J/244 | குட்டியபுலம், வசாவிளான் | 2 |
| 41 | சின்னையா மகாலிங்கம் | 15 | J/244 | குட்டியபுலம், வசாவிளான் | 3 |
| 42 | சரவணன் இராசதுரை | 15 | J/244 | குட்டியபுலம், வசாவிளான் | 8 |
| 43 | ஜீவரத்தினம் தவமலராணி | 16 | J/239 | கட்டுவன் மேற்கு | 6 |
| 44 | நவேந்திரகலா கேதீஸ்வரன் | 16 | J/238 | கட்டுவன் தெற்கு | 4 |
| 45 | இராஜகுமார் செந்தில்செல்வி | 16 | J/239 | கட்டுவன் மேற்கு | 2 |
| 46 | இராசேந்திரன் சுகிர்தரஞ்சினி | 17 | J/228 | புகையிரதவீதி, தெல்லிப்பளை | 2 |
| 47 | பூபாலு புஸ்பலதா | 17 | J/227 | சித்தியம்புளியடி, தெல்லிப்பளை | 2 |
| 48 | துஷ்யந்தன் சுபாசினி | 17 | J/227 | கிட்டங்கி வீதி, தெல்லிப்பளை | 2 |
| 49 | தயாநிதி நிரோஷியா | 18 | J218 | கணேஸ்வரம் | 6 |
| 50 | சிவநாதன் சிவறாஜினி | 18 | J218 | கணேஸ்வரம் | 2 |
| 51 | சின்னராசா லோகநாயகி | 18 | J218 | கணேஸ்வரம் | 5 |
| 52 | ஶ்ரீரங்கநாதன் மகேஸ்வரி | 19 | J/219 | அடுவம்பற்று | 5 |
| 53 | தெய்வேந்திரம் ஶ்ரீரஞ்சன் | 19 | J/220 | தம்பளாவத்தை | 4 |
| 54 | கிருபாகரன் பாமினி | 19 | J/220 | அருவம்பற்று | 4 |
| 55 | மைக்கல் அஞ்சலோபற்றிமாபதமராணி | 20 | J/214 | குளமங்கால் | 4 |
| 56 | செல்வநாயகம் பீட்ரர் அலைக்ஸ் | 20 | J/214 | குளமங்கால் | 2 |
| 57 | ஜேசுதாசன் இராசியன்தாஸ் | 20 | J/214 | குளமங்கால் | 5 |
| 58 | கெங்காசோதி நாகேஸ்வரி | 21 | J/212 | இக்கிராணை | 2 |
| 59 | கந்தன் கஜன் | 21 | J/212 | நரியிட்டான் | 3 |
| 60 | வி.மயூரி | 21 | J/212 | நரியிட்டான் | 2 |

- ❖ கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா அவர்கள் எனது வட்டாரத்தில் திருமதி.சூசைதாஸ் தேவமலர் குடும்பத்தினர் கடற்தொழிலில் அதிகளவு நேரம் செலவிடுபவர்கள். இதற்காக வீட்டுத்தோட்டத்தில் ஆர்வமுடைய வேறு ஒருவரை மாற்ற வேண்டும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஶ்ரீதாமோதரராசா அவர்கள் எனது வட்டாரத்தில் ஒரு கிராம சேவையாளர் பிரிவில் மட்டுமே பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இனிவரும் காலங்களில் தெரிவுகளை மேற்கொள்ளும் போது வட்டார உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்தால் சிறப்பாக அமையும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் இரத்தினபூபதி அவர்கள் எனது வட்டாரத்தில் திருமதி.விநாயகதாசன் இரஞ்சினிதேவி அவர்களுக்கு இடவசதி பற்றாக்குறையாக இருப்பதால் இத் தெரிவை மாற்றம் செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர்களாக சண்முகலிங்கம் சஜீவன், கைலைவாசன் சீதாராமன் ஆகியோர் இத் தெரிவுகளை மேற்கொள்ளும் போது கௌரவ உறுப்பினர்களுடன் கலந்துரையாட வேண்டும் எனத் தெரிவித்தனர்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் களஆய்வு செய்து இயலுமை, இடவசதி, நீர் வசதி என்பவற்றை கருத்திற்கொண்டு இத்தெரிவை மேற்கொண்டுள்ளனர். இத் தெரிவுகள் பொருத்தப்பாடு இல்லாவிட்டால் செயலாளருடன் கலந்துரையாடி மாற்றங்களை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கப்படும் பொருட்கள் தொடர்பாக கேட்டார்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் மண்வெட்டி, பூவாளி போன்ற பொருட்களை மக்களின் தேவை அடிப்படையில் வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 17/15.09.2022**

தீர்மான இல:- 17/18.08.2022 இன் பிரகாரம் CDLG திட்டத்தினூடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 600,000.00 இனை பயன்படுத்தி வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட பின்வரும் பயனாளிக்கு குறித்த செயற்திட்டத்தினை மேற்கொள்ளவதென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**வீட்டுத்தோட்ட உதவிகோரும் பயனாளிகள் விபரம்**

| தொ. இல | முழுப் பெயர் | வட்டாரம் | கிராம அலுவலர் பிரிவு | முகவரி | குடும்ப அங்கத்தவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | பகீரதன் வனிதா | 1 | J/222 | கூவில் கீரிமலை | 5 |
| 2 | மயில்வாகனம் பாலேஸ்வரி | 1 | J/222 | கூவில் கீரிமலை | 5 |
| 3 | கமலக்கண்ணன் றொஜிதா | 1 | J/222 | கூவில் கீரிமலை | 4 |
| 4 | மரியவேஜினி இக்னேரியஸ் | 2 | J/221 | சென்ஜேம்ஸ், இளவாலை வடக்கு | 2 |
| 5 | சுரேஸ்குமார் டோமினிக்கா | 2 | J/221 | சென்ஜேம்ஸ், இளவாலை வடக்கு | 1 |
| 6 | நிதர்சன் சோபிகா | 2 | J/221 | நாதோலை, இளவாலை வடக்கு | 4 |
| 7 | அரியகுட்டி அமுதராசா | 3 | J/233 | மாம்பிராய் வீதி, காங்கேசன்துறை | 4 |
| 8 | பத்மராசா கஜன் | 3 | J/233 | மாம்பிராய் வீதி, காங்கேசன்துறை | 4 |
| 9 | யோகராசா ரதீஸ்வரன் | 3 | J/233 | மாம்பிராய் வீதி, காங்கேசன்துறை | 4 |
| 10 | குணரத்தினம் இரத்தினேஸ்வரன் | 4 | J/250 | கேசரிவீதி, தையிட்டி | 4 |
| 11 | பொன்னுச்சாமி கேதீஸ்வரன் | 4 | J/249 | சேகரம்வீதி, தையிட்டி | 6 |
| 12 | சுப்பிரமணியம் பத்மநாதன் | 4 | J/250 | கலைவாணி வீதி, தையிட்டி | 3 |
| 13 | ரவீந்திரன் அன்பரசி | 5 | J/251 | வீரமாணிக்கம் தேவன்துரை மயிலிட்டித்துறை வடக்கு | 3 |
| 14 | ராஜ் ராஜீவ்காந்தி | 5 | J/251 | மயிலிட்டித்துறை வடக்கு | |
| 15 | கணேசமூர்த்தி தேவகி | 5 | J/246 | நாவலடி வீதி, மயலிட்டி வடக்கு | 4 |
| 16 | சூசைதாஸ் தேவமலர் | 7 | J/254 | அன்ரனிபுரம், பலாலி வடக்கு | 2 |
| 17 | எட்மன் ஜெயராசா மரியகிறேற்ரா | 7 | J/254 | அன்ரனிபுரம், பலாலி வடக்கு | 4 |
| 18 | பிரேமதாஸ் பற்றிமாவதி | 7 | J/246 | அன்ரனிபுரம், பலாலி வடக்கு | 1 |
| 19 | பிரசாத் மயூரி ஜென் சலஸ்ரினா | 8 | J/252 | பலாலி தெற்கு, வசாவிளான் | 4 |
| 20 | திருச்செல்வம் அருள்ஜெயபால் | 8 | J/252 | பலாலி தெற்கு, வசாவிளான் | 5 |
| 21 | பொன்ராசா புனிதஅமலராணி | 8 | J/252 | பலாலி தெற்கு, வசாவிளான் | 2 |
| 22 | முருகையா நகுலேஸ்வரி | 9 | J/231 | சாயுடை, மாவிட்டபுரம் | 4 (மனநோயாளி) |
| 23 | விக்கினேஸ் துஸ்யந்தினி | 9 | J/237 | பளை வீமன்காமம் தெற்கு, தெல்லிப்பளை | 4 |
| 24 | நல்லதம்பி தெய்வானைப்பிள்ளை | 9 | J/231 | அரசடி வீதி, மாவிட்டபுரம் | 2 |
| 25 | பஞ்சலிங்கம் மகேஸ்வரி | 10 | J/225 | மாவைகலட்டி, கொல்லங்கலட்டி | 1 |
| 26 | நித்தியானந்தம் சுபாசினி | 10 | J/225 | மாவைகலட்டி, கொல்லங்கலட்டி | 4 |
| 27 | தவபாலன் மகாராணி | 10 | J/225 | மாவைகலட்டி, கொல்லங்கலட்டி | 2 |
| 28 | ஜெயசீலன் பத்மினி | 11 | J/223 | நவக்கிரி, வித்தகபுரம் | 5 |
| 29 | அருமைநாயகம் ராஜேஸ்வரி | 11 | J/223 | நவக்கிரி, வித்தகபுரம் | 6 |
| 30 | ஜெகதீஸ்வரன் ஜெகதீஸ்வரி | 11 | J/223 | நவக்கிரி, வித்தகபுரம் | 4 |
| 31 | நவரத்தினம் பிரசாத் | 12 | J/215 | பொன்னிப்புலம் | 2 |
| 32 | வீரவாகு ஆனந்தராசா | 12 | J/216 | அளவெட்டி மத்தி | 5 |
| 33 | சுதேஸ்வரன் மாலினி | 12 | J/215 | அளவெட்டி வடக்கு | 3 |
| 34 | விநாயகதாசன் இரஞ்சினிதேவி | 13 | J/230 | சந்தை வீதி, தெல்லிப்பளை | 2 |
| 35 | சுதாகரன் தவராணி | 13 | J/230 | சந்தை வீதி, தெல்லிப்பளை | 2 |
| 36 | உதயகுமார் உதயசாந்தினி | 13 | J/229 | சாத்தனாவத்தை, துர்க்காபுரம் | 2 |
| 37 | கணேசானந்தம் சந்திராதேவி | 14 | J/241 | டச்சு வீதி 3ம் ஒழுங்கை, வறுத்தலைவிளான் | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 38 | சௌந்தர்ராஜன் வசந்தி | 14 | J/241 | வல்லை அராலி வீதி, வறுத்தலைவிளான் | 2 |
| 39 | வின்சன் சுமித்திரா | 14 | J/241 | டச்சு வீதி, வறுத்தலைவிளான் | 2 |
| 40 | பொன்னு இராசதுரை | 15 | J/244 | குட்டியபுலம், வசாவிளான் | 2 |
| 41 | சின்னையா மகாலிங்கம் | 15 | J/244 | குட்டியபுலம், வசாவிளான் | 3 |
| 42 | சரவணன் இராசதுரை | 15 | J/244 | குட்டியபுலம், வசாவிளான் | 8 |
| 43 | ஜீவரத்தினம் தவமலராணி | 16 | J/239 | கட்டுவன் மேற்கு | 6 |
| 44 | நவேந்திரகலா கேதீஸ்வரன் | 16 | J/238 | கட்டுவன் தெற்கு | 4 |
| 45 | இராஜகுமார் செந்தில்செல்வி | 16 | J/239 | கட்டுவன் மேற்கு | 2 |
| 46 | இராசேந்திரன் சுகிர்தறஞ்சினி | 17 | J/228 | புகையிரதவீதி, தெல்லிப்பளை | 2 |
| 47 | பூபாலு புஸ்பலதா | 17 | J/227 | சித்தியம்புளியடி, தெல்லிப்பளை | 2 |
| 48 | துஷ்யந்தன் சுபாசினி | 17 | J/227 | கிட்டங்கி வீதி, தெல்லிப்பளை | 2 |
| 49 | தயாநிதி நிரோஷியா | 18 | J218 | கணேஸ்வரம் | 6 |
| 50 | சிவநாதன் சிவறாஜினி | 18 | J218 | கணேஸ்வரம் | 2 |
| 51 | சின்னராசா லோகநாயகி | 18 | J218 | கணேஸ்வரம் | 5 |
| 52 | ஸ்ரீரங்கநாதன் மகேஸ்வரி | 19 | J/219 | அடுவம்பற்று | 5 |
| 53 | தெய்வேந்திரம் ஸ்ரீரஞ்சன் | 19 | J/220 | தம்பளாவத்தை | 4 |
| 54 | கிருபாகரன் பாமினி | 19 | J/220 | அருவம்பற்று | 4 |
| 55 | மைக்கல் அஞ்சலோபற்றிமாபதமராணி | 20 | J/214 | குளமங்கால் | 4 |
| 56 | செல்வநாயகம் பீட்ரர் அலைக்ஸ் | 20 | J/214 | குளமங்கால் | 2 |
| 57 | ஜேசுதாசன் இராசியன்தாஸ் | 20 | J/214 | குளமங்கால் | 5 |
| 58 | கெங்காசோதி நாகேஸ்வரி | 21 | J/212 | இக்கிரானை | 2 |
| 59 | கந்தன் கஜன் | 21 | J/212 | நரியிட்டான் | 3 |
| 60 | வி.மயூரி | 21 | J/212 | நரியிட்டான் | 2 |

➢ இவ்வருடத்திற்கான வருடாந்த வரவு செலவுத்திட்டத்தில் 1-107-9 செலவினத் தலைப்பின் கீழ் உள்ளூராட்சி வார நிகழ்வுகளுக்காக ரூபா 200,000.00 இற்கான செலவினை கௌரவ ஆளுநரின் அனுமதியினைப் பெற்று மேற்கொள்வதற்காக சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 18/15.09.2022**
இவ்வருடத்திற்கான வருடாந்த வரவு செலவுத்திட்டத்தில் 1-107-9 செலவினத் தலைப்பின் கீழ் உள்ளூராட்சி வார நிகழ்வுகளுக்காக ரூபா 200,000.00 இற்கான செலவினை கௌரவ ஆளுநரின் அனுமதியினைப் பெற்று மேற்கொள்வதென கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மயூரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன் அவர்கள் காலை 10.44 மணிக்கு கௌரவ தவிசாளரின் அனுமதியைப் பெற்று சபையிலிருந்து வெளியேறினார்.

❖ பின்வரும் விடயம் தகவலுக்காக சபைக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

எமது சபையில் வேலை/வெளிக்களத் தொழிலாளிகளாக கடமையாற்றி வருகின்ற திரு.இ.நாகவேல்ராசா அவர்கள் 07.10.2022 ஆம் திகதியும், திரு.பொ.அன்ரன் அல்வீனசம் அவர்கள் 17.12.2022 ஆம் திகதியும் ஓய்வு பெறவுள்ளனர்.

▪ அடுத்து 2022 ஆம் ஆண்டுக்கான ஓகஸ்ட் மாதத்திற்கான கணக்கறிக்கை கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திற்கான கணக்கறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ அடுத்து 18.08.2022 ஆம் திகதி நடைபெற்ற வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திக் குழுக் கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.

❖ பாடசாலை மாணவர்களை போதைப் பொருள் பாவனையிலிருந்து மீட்பதற்கு அவர்களை வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையில் ஈடுபட வழிப்படுத்த முடியும்.
❖ பாடசாலைகள் சிலவற்றை தெரிவு செய்து அவற்றில் ஒரு வகுப்பு மாணவர்களுக்கு குறுகிய காலத்தில் பயனளிக்க கூடிய விதைகளை வழங்கி பாடசாலையில் தோட்டம்

அமைக்க ஊக்குவிப்பதன் மூலம் அவர்கள் தமது நேரத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.

- ❖ மூலிகைப்பயிர்ச்செய்கையையும் ஊக்குவித்தால் பயனுடையதாக இருக்கும்.
- ❖ கௌரவ உறுப்பினர்கள் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் ஒவ்வொரு பாடசாலையை தெரிவு செய்து வழங்கினால் அப் பாடசாலைகளுக்கு கடிதம் அனுப்பி வைத்து கலந்துரையாடல் ஒன்றை நடாத்தி விதைகளை வழங்கலாம்.

- ▪ கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் காலை 10.58 மணிக்கு கௌரவ தவிசாளரின் அனுமதியைப் பெற்று சபையிலிருந்து வெளியேறினார்.

- ➢ கௌரவ தவிசாளர் அவர்கள் பின்தங்கிய கிராம பாடசாலைகளில் இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்துவது சிறப்பாக அமையும் எனத் தெரிவித்தார்.
- ➢ கௌரவ உறுப்பினர் சேனாதிராசா கலையமுதன் அவர்கள் பயன்படுத்தப்படாமல் பற்றையாக உள்ள காணிகளை விவசாய நடவடிக்கைக்கு பயன்படுத்த ஒழுங்கு மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.
- ➢ கௌரவ தவிசாளர் அவர்கள் பயன்படுத்தப்படாத காணிகளை இனங்கண்டால் அவற்றில் சிவப்பு எச்சரிக்கை பதாதைகள் (Red Notice) வைத்து தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.
- ➢ கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் குழுக் கலந்துரையாடல்களை மாலை நேரங்களில் நடாத்தினால் கலந்து கொள்ள இலகுவாக அமையும் எனத் தெரிவித்தார்.
- ➢ கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் இளம் சமுதாயம் போதைப்பொருள் பாவனையால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றது. இவர்களின் எதிர்காலம் அழிவடைந்து வருகின்றது. இதற்கு விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொண்டால் சிறப்பாக இருக்கும் எனத் தெரிவித்தார்.
- ➢ கௌரவ தவிசாளர் அவர்கள் இது தொடர்பாக பெற்றோர் கவனமெடுக்க வேண்டியதும் முக்கியமாகும் எனத் தெரிவித்தார்.
- ➢ கௌரவ உறுப்பினர் சேனாதிராசா கலையமுதன் அவர்கள் கூட்டங்கள், பயிற்சிநெறிகளில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே அறிவித்தல் வழங்கினால் பங்குபற்றுவது இலகுவாக அமையும். குறுகிய கால அறிவித்தலில் சில சந்தர்ப்பங்களில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்படுகின்றது எனத் தெரிவித்தார்.

- ➢ அடுத்து ஏனைய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.
  - ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் ஒக்டோபர் மாதம் உள்ளூராட்சி மாதமாக பிரகடனப்படுத்தி ஆதன வரி அறவீடு தொடர்பான நடமாடும் சேவையை நடாத்தி அறவீடுகளை பெற்றுக் கொள்வதன் மூலம் சபையின் வருமானங்களை அதிகரிக்கலாம். கௌரவ உறுப்பினர்களை ஊக்குவிக்கும் முகமாக விளையாட்டுப்போட்டி நடாத்தல், சுற்றுச் சூழலை துப்பரவாக வைத்திருப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கிராமங்களில் சிரமதானம் மேற்கொள்ளல், நிர்வாக சபைக் கூட்டங்களை நடாத்தி செயற்பாடு இன்றி காணப்படும் சனசமூக நிலையங்களை இயங்க வைத்தல் போன்ற சில வேலைத்திட்டங்களை மேற்கொள்ளலாம். எதிர்வரும் காலங்களில் உள்ளூராட்சி மாநாடு, மாணவர்களுக்கு உள்ளூராட்சி தொடர்பான தலைப்புகளில் கட்டுரைப்போட்டிகள் நடாத்துதல் போன்றவற்றின் மூலம் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் தொடர்பான விடயங்களை மக்கள் அறிந்து கொள்ள தூண்டுதலாக அமையும். தேசிய வாசிப்பு மாதம் தொடர்பான நிகழ்வுகள் சபையின் பொதுநூலகங்களால் நடாத்தப்படும் எனத் தெரிவித்தார்.

    இவ்விடயம் பரிசீலிக்கப்பட்டு பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 19/15.09.2022**

வலிகாமம் வடக்கில் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தினை உள்ளூராட்சி மாதமாக பிரகடனப்படுத்துவதுடன் உள்ளூராட்சி மாதத்தை ஒட்டிய செயற்திட்டங்களாக ஆதன வரி அறவீடு தொடர்பான நடமாடும் சேவை, கௌரவ உறுப்பினர்களுக்கான விளையாட்டுப்போட்டி, கிராமங்களில் சிரமதானம் மேற்கொள்ளல், சனசமூக நிலையங்களை மீள இயங்க வைத்தல் போன்றவற்றை மேற்கொள்வதென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் எமது பிரதேசத்தின் காணி விடுவிப்பு தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இராணுவத்தளபதியுடன் கலந்துரையாடியதற்கமைய J/233 கிராம சேவையாளர் பிரிவின் மாங்கொல்லை, வசாவிளான் பகுதிகளில் விடுவிக்கப்பட வேண்டிய காணிகளின் உரிமையாளர்கள் தங்கள் கோரிக்கை கடிதங்களை சமர்ப்பித்தால் நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனத்

தெரிவிக்கப்பட்டது. காங்கேசன்துறையில் அமைந்துள்ள எமது சபையின் தலைமை அலுவலகத்திலிருந்து இராணுவம் வெளியேறியுள்ளது எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் வளர்மதி சனசமூக நிலைய சுற்றாடலில் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதனால் நுளம்பு தொல்லை அதிகமாக காணப்படுகின்றது. எனவே அப்பகுதிகளில் மண் நிரவி வெள்ளம் தேங்காமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ தவிசாளர் அவர்கள் சனசமூக நிலையத்தின் நிர்வாக குழுவில் கலந்துரையாடி சனசமூக நிலையத்தினரால் ஒழுங்குகளை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர் சண்முகலிங்கம் சஜீவன் அவர்கள் வசாவிளான் பகுதியில் J/245 கிராம சேவையாளர் பிரிவில் இராணுவ வைத்தியசாலை கட்டப்பட்டு வருகின்றது. இதில் 8 குடும்பங்களை சேர்ந்த மக்களின் காணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கண்காணித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தையிட்டியில் தனியார் காணியில் விகாரை அமைக்கப்படுவதை நிறுத்த வேண்டும் என மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பாக பதில் கிடைக்கப்பெற்றதா எனவும் எமது சபைக்குட்பட்ட பிரதேசங்களில் தொலைத்தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்கள், எண்ணிக்கை, சபையின் அனுமதி பெறப்பட்டதா என்ற விபரங்களை வழங்க முடியுமா எனவும் கேட்டார்.

❖ கௌரவ தவிசாளர் அவர்கள் காணி விடுவிப்பு தொடர்பாக சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் கோரிக்கை கடிதம் சமர்ப்பிக்க வேண்டும். தையிட்டியில் தனியார் காணியில் விகாரை அமைக்கப்படுவதை நிறுத்த வேண்டும் என மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பாக பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை. தொலைத்தொடர்பு கோபுரங்கள் தொடர்பாக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம். உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு சபையின் அனுமதி பெறப்படுவது இல்லை எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர் சண்முகலிங்கம் சஜீவன் அவர்கள் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைக்கப்படும் தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு சபையில் அனுமதி பெற்றுக் கொள்ளுமாறும் அனுமதியற்ற தொலைத்தொடர்பு கோபுரங்களை அப்புறப்படுத்துமாறும் யாழ் மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதிக்கு அறிவுறுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் இவ்வருட இறுதியில் விடுவிக்கப்படாத மக்களின் காணிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார் எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா அவர்கள் கட்டுப்பிட்டி இந்து மயானத்தின் பாதுகாப்பு அறை அமைக்கப்பட்டு வேலைகள் முழுமையாக பூரணப்படுத்தப்படவில்லை. மயானம் பற்றையாக காணப்படுகின்றது இவை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

❖ கௌரவ தவிசாளர் அவர்கள் ஒப்பந்ததாரருக்கு விபத்து ஏற்பட்டு இருப்பதனால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் கௌரவ தவிசாளர், சக உறுப்பினர்கள், சபையின் செயலாளர் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்ததுடன் மலைவேம்படி சந்தையில் குடிநீரை பெற்றுக் கொள்வதற்கான கிணற்றினை இறைத்து மீள நீர் மாசடையாமல் இருப்பதற்கு ஒழுங்கு மேற்கொள்ள வேண்டும். மலசலகூடம் அசுத்தமாக காணப்படுகிறது. அதனை துப்பரவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அடுத்ததாக சமூக சேவைகள் திணைக்களத்தால் முதியோரிற்கு மாதாந்தம் வழங்கப்படும் கொடுப்பனவு இதுவரை காலமும் தபால் அலுவலகங்கள், உபதபால் அலுவலகங்களிலேயே வழங்கப்பட்டு வந்தது. இனிவரும் காலங்களில் இக் கொடுப்பனவு சமுர்த்தி வங்கியில் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வதிவிடங்களுக்கு அண்மையிலுள்ள உபதபாலகங்கள், தபாலகங்களில் கொடுப்பனவினை பெற்றுக் கொள்வது இலகுவாக இருந்தது. வதிவிடங்களில் இருந்து தொலைவாக சமுர்த்தி வங்கிகள் இருப்பவர்கள் இதனால் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர் எனத் தெரிவித்தார்.

இவ்விடயம் பரிசீலிக்கப்பட்டு பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 20/15.09.2022**
சமூக சேவைகள் திணைக்களத்தால் முதியோரிற்கு மாதாந்தம் வழங்கப்படும் கொடுப்பனவு இதுவரை காலமும் தபால் அலுவலகங்கள், உபதபால் அலுவலகங்களிலேயே வழங்கப்பட்டு வந்தது. இனிவரும் காலங்களில் இக் கொடுப்பனவு சமுர்த்தி வங்கியினால் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். முதியோர் இக்கொடுப்பனவை இலகுவாக பெற்றுக்கொள்ளும் வகையில் மீளவும் தபால் அலுவலகங்கள், உபதபால் அலுவலகங்களில் இக்கொடுப்பனவை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- இத் தீர்மானத்தை தொடர்புடைய அமைச்சருக்கு கடிதம் மூலம் அனுப்ப வேண்டும் எனவும் சபையால் தீர்மானிக்கப்பட்டது.

- ❖ தொடர்ந்து கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் அளவெட்டி மேற்கில் அமைந்துள்ள யா/அருணோதயாக் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு கட்டடம் பாவனையற்ற நிலையில் உள்ளது. அங்கு சமூக பிறழ்வு செயற்பாடுகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இக்கட்டடத்தினை வேறு பயனுடைய தேவைகளுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தற்போது மாணவர்கள் பாடசாலை நேரங்களில் வெளி இடங்களில் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அவர்களின் எதிர்காலத்தை கருதி விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் தற்போது மாகாணக்கணக்காய்வு திணைக்களத்தினால் பயன்பாடு அற்ற கட்டடங்களை அடையாளப்படுத்தி மாகாண சபைக்கு உரித்துடையதாக்கி வேறு திணைக்களங்களின் பயன்பாட்டிற்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களுக்கு வாழ்வாதார உதவி வழங்குவதற்காக அன்பளிப்பாளரால் வழங்கப்பட்ட ரூபா 100,000.00 இற்கான பயன்பாடு தொடர்பான விபரங்களை சபைக்கு சமர்ப்பித்தால் சிறப்பாக இருக்கும். எமது உப அலுவலகங்களிலும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அனைவருக்கும் முன்னுதாரணமாக அமையும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் மேற்படி பாடசாலைக்கட்டடத்தினை கிராம முன்னேற்ற சங்கத்தின் வளநிலையமாக பயன்படுத்த அல்லது வேறு தேவைகளுக்கு பயன்படுத்த அறிவுறுத்தலாம் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் சரவணமுத்து தனபாலசிங்கம் அவர்கள் புதிய செயலாளராக பொறுப்பேற்றிருக்கும் திரு.சு.சுதர்ஜன் அவர்களை வரவேற்றதுடன் வட்டாரத்தில் வீட்டுத்தோட்ட பயனாளிகளை தெரிவு செய்யும் போது வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என்னுடன் கலந்துரையாடவில்லை. சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கௌரவ உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டது. அவற்றில் சில நடைமுறைப்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் மத்திய அரசினால் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் சிலவற்றையே நடைமுறைமுறைப்படுத்த முடியாமல் உள்ளது என தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா அவர்கள் பலாலி வடக்கில் உரிய ஆவணங்கள் இல்லாத காணிகள் வெளிநாட்டில் வசிப்பவர்களால் கொள்வனவு செய்யப்படுகின்றன. மேய்ச்சல் தரையாக காணப்பட்ட காணிகளை வெளிப்படுத்தல் உறுதியுடன் வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு விற்பனை செய்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகளை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் சண்முகலிங்கம் சஜீவன் அவர்கள் பிரதேச சபையின் சொத்து விபரங்களை சபை உறுப்பினர்களுக்கு வழங்கினால் சபையின் காணிகள் இருக்கும் இடங்களை அறிந்து கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

இத்துடன் கூட்டமானது காலை 11.55 மணிக்கு இனிதே நிறைவு பெற்றது.

ஒப்பம்: சு.சுதர்ஜன்
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

ஒப்பம்: சோ.சுகிர்தன்
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

உண்மைப்பிரதியென உறுதிப்படுத்துகின்றேன்.

திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை
காங்கேசன்துறை.